கவிச் சக்கரவர்த்தி

கம்பன்

இயற்றியவர்

சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீராமகிருஷ்ண
தபோவனப் பிரசுராலயம்

திருப்பராய்த்துறை போஸ்ட்,
எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா

தபோவனத் தொடர் 28

தபோவன அச்சகம், திருப்பராய்த்துறை

கவிச் சக்கரவர்த்தி கம்பன்

உலகில் மூன்றுவித அரசர்கள் இருக்கின்றனர். அவர்கள் முறையே புவிராஜன், கவிராஜன், தவராஜன் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களுள் மிக எளிதில் கிடைக்கக் கூடியவர்கள் புவிராஜர்கள். அவர்கள் மண் ஆளும் வேந்தர்கள் ஆகின்றனர். எக்காலத்திலும் எந்நாட்டிலும் அத்தகையவர்களைக் காணலாம். நாடாளும் வேந்தர்கள் பலர் உயிரோடு இருக்கும் வரையில் சிறப்புற்றிருக்கின்றனர். அவர்களின் உடல் மறையும் பொழுதே அவர்களின் சிறப்பும் மறைந்து போய்விடுகிறது. ஆதலால் வேந்தர்களுள் நாடாளும் வேந்தர்கள் மூன்றும் தரமானவர்கள். தவராஜர் எனப்படுவோர் உலகில் காண்பதற்கு அரியவர்கள். அந்தச்

சிறுபான்மையோரும் உலகத்தவர் காட்சிக்குப் பெரும்பாலும் தென்படுவதில்லை. மறைமுகமாக மண்ணுலகில் அவர்கள் இருந்துகொண்டு மேலாம் கருத்துக்களை எண்ணுவதே உலகுக்கு அவர்கள் கொடுக்கும் பெருங்கொடையாகும். அவர்கள் பெரிதும் அருள் உலக சம்பந்தப்பட்டவர்கள். ஆதலால் அவர்களைப்பற்றி அதிகம் பகர்தற்கு நமக்குப் புள்ளிவிவரங்கள் கிடைப்பதில்லை.

இந்த இருதர ராஜர்களுக்கிடையில் இருப்பவன் கவிராஜன் என்பவன். புவிராஜனுக்கும் கவிராஜனுக்கும் பெரிய வேற்றுமை ஒன்று உண்டு. வாணவேடிக்கைபோன்று புவிராஜன் வாழ்ந்திருக்கின்றபொழுது சிறப்புற்று விளங்குகிறான். கவிராஜனோ வானத்தில் இலங்கும் நக்ஷத்திரங்கள் போன்றவன். கவிராஜனுடைய உடல்

மறைந்து போய்விடும்பொழுது அவனுடைய ஆட்சிமுறையும், புகழும் அவனோடு மறைந்து போய்விடுவதில்லை. ஒரு விதத்தில் கவிராஜனுடைய ஆதிக்கம் அவன் உடல் மறைந்து நெடுநாளைக்குப் பிறகு அதிகரித்துக்கொண்டே போகிறது. இலக்கியம் உலகில் இருக்கும் வரையிலும், இலக்கியத்தை ரசிக்கும் நன்மக்கள் உலகில் இருக்கும் வரையிலும் கவிராஜனுடைய ஆட்சி அதிகரித்துக்கொண்டே வருகிறது. அத்தகைய கவிராஜர் கூட்டத்தைச் சேர்ந்தவன் கம்பன். கவிராஜர்களுக்கிடையில் அவன் ராஜாதிராஜன் ஆகின்றான். அரசர்களுக்கெல்லாம் பேரரசனே சக்கரவர்த்தி என்னும் பெயர் பெறுகிறான். கம்பனைக் கவிச்சக்கரவர்த்தி என்று பகர்வது முற்றிலும் பொருந்தும். தனது கவிதை என்னும் பொக்கிஷத்தைப் பாரினுள் அவன் வழங்கிய நாள்முதல்

இன்றுவரை பல கவிஞர்களுக்கு முன் மாதிரியாக அது அமைந்துள்ளது. கவிஞர் களைக் கவித்துறையிலே நடாத்தும் சக்தி கம்பனுடைய கவிதையில் இருக்கிறது. ஆதலால்தான் கம்பனைக்கவிச்சக்கரவர்த்தி என்று இயம்பவேண்டும். அரசன் ஒரு வனுக்கு ஆளும் திறமை இருக்கவேண்டும்; ஆளுதற்கு நாடும் வந்தமையவேண்டும். இந்த இரண்டும் சேர்ந்து அமையாவிட் டால் அரசன் அரசனென அழைக்கப்பட மாட்டான். கவியரசனுக்கு மொழியைச் சிருஷ்டிக்கும் திறமைவேண்டும். உயிர் குன்றியமொழி கவி ஒருவனுடைய கைக்கு வரும்பொழுது உயிர் நிறைந்த மொழி ஆகிறது. கருத்தை நன்கு விளக்கத் தகுதி யற்ற மொழி என்று பகரப்பெறுவது கவிஞனுடைய ஆதிக்கத்துக்கு வரும் பொழுது தகுதி அனைத்தையும் பெற்று விடுகிறது. மேலாம் கருத்துக்களுக்குப்

பண்புடன் பணிவிடை செய்யும் பாங்கு மொழிக்குக் கவிஞன் வாயிலாக வந்துவிடு கிறது. மொழியை அப்படித் திருத்தி யமைப்பதால் கவிஞன் மொழிக்கு சிருஷ்டி கர்த்தா ஆகின்முன். உயிர் நிறைந்த பழைய தமிழ்மொழிக்குப் புதிய உயிரைக் கம்பன் ஊட்டியிருக்கிமுன். அதனுல் அவன்மூலம் அது பேர்உயிர் படைத் துள்ள மொழியாக வடிவெடுத்திருக்கிறது. இந்த மொழியைக் கருவியாக வைத்துக் கொண்டு வாழ்க்கையின் பலதரப்பட்ட லக்ஷியங்களேக் கம்பன் படம்பிடித்துக் காட்டுகிமுன். விதவிதமான பாங்குடைய மக்களே விளக்கிக் காட்டுவதே கவியரசன் ஆளும் நாடு ஆகும். ராமாயணம் என் னும் சிறந்த இதிகாசம் கம்பனுடைய ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசம். தன் னுடைய சொல் சித்திரத்தைக்கொண்டு அதை மிகவும் அற்புதமாக அமைத்து

வைத்திருப்பது அவனுடைய ஆட்சித் திறமையாகும். ஆகவே கவிதை உலகில் நல்ல ஆட்சித் திறமையும், வளம்யாவும் நிறையப்பெற்ற நாடும் கம்பனுக்கு அமைந்துள்ளன. ஆதலால் கவிதை உலகில் அவன் பேரரசன் ஆயிருப்பதில் வியப்பொன்றுமில்லை.

ராமாயணம் என்னும் இதிகாசத்தை ஒரு பாங்கில் பகர்ந்தால் கவியரசனுக்குரிய நாடு ஆகிறது. இன்னொரு பாங்கில் பகர்ந்தால் கவியரசனால் அமைக்கப்பெற்றுள்ள பெருங்கோயில் ஆகிறது. கோயில் அமைப்புக்குச் சில விதிகள் உண்டு. அவ்விதிகளை மீறிச்செல்வதற்கான உரிமைகளும் சில உண்டு. சிற்சில இடங்களில் தன்னுடைய வேலைத்திறனைக் காட்டுதற்கு விதிகளைமீறி வேலைக்காரன் போய்விடலாம். ஆனால் சில தத்துவங்களை அமைக்கவேண்டிய

இடத்தில் அவன் விதிக்குட்பட்டவனுகவே இருந்தாகவேண்டும். இப்படிப் பகர்ந்து கொண்டுபோனுல் உட்கருத்து எல்லார்க்கும் விளங்காது. சான்றின் மூலம் இதே கோட்பாட்டை மேலும் விளக்குவோம். ராஜகோபுரம் அமைப்பது கோயில் அமைப்பில் இடம் பெற்றிருக்கிறது. மூலஸ்தானம் அல்லது கர்ப்பக்கிரகத்தை அமைப்பதும், அதனுள் மூர்த்தியைப் பிரதிஷ்டை பண்ணுவதும் அதே ஆலய அமைப்பில் இடம் பெற்றிருக்கிறது. சில்பி ஒருவன் தன்னிடத்துள்ள விதவிதமான திறமைகளையெல்லாம் ராஜகோபுரத்திலும், மஹாமண்டபத்திலும், கல்யாணமண்டபத்திலும், இதர இடங்களிலும் காட்டலாம். கர்ப்பக்கிரக அமைப்புக்கு வருமிடத்து, அந்தக் கர்ப்பக்கிரகத்துக்குள் மூர்த்தியைப் பிரதிஷ்டை பண்ணுகிற பெரும் செயலில் ஈடுபடு

மிடத்து அவன் தத்துவத்தினின்று இம்மி யளவும் பிசகலாகாது. இவையாவும் கோயில் அமைப்பைப்பற்றிய முக்கியமான கோட்பாடுகள். ராமாயணம் என்னும் கோயிலை வால்மீகி மகரிஷி என்னும் ஆதி கவி ஒரு பாங்கில் கட்டியிருக்கிறார். அதே கோயிலை கவிச்சக்கரவர்த்தி என்னும் கம்பன் இன்னொரு பாங்கில் கட்டியிருக்கிறார்.

கோயிலைக் காண வருகிறவர்கள் பெரும்பாலும் புறத்தோற்றத்திலுள்ள வேலைப்பாடுகளைப் பார்த்து ரசிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கின்றனர். அப்படி அவர்கள் ரசிப்பதற்கு வேண்டிய வாறு கலைத்திறன்கள் கோயிலமைப்பில் காட்டப்பட்டிருக்கின்றன. கம்பன் கட்டி யுள்ள கோயிலை ரசிக்கின்றவர்களும் பெரும்பாலும் அதனிடத்துள்ள புற அழ குகளை ரசிப்பதிலேயே மூழ்கிவிடுகின்றனர்.

சொல் அழகு, விதவிதமான பாத்திரங்களின் பாங்குகள், அந்தப் பாத்திரங்களை ஒன்றோடொன்று சீர்தூக்குதல் ஆகிய இத்தகைய செயல்களிலேயே தங்கள் கருத்தைச் செலுத்துகின்றனர். ஆலயம் ஒன்று மிக அழகாக அமைக்கப் பெற்றிருப்பதினால் அது அருள் நிறைந்த ஆலயம் ஆய் விடாது. அந்த ஆலயத்தின்கண் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியினிடத்து அருள் நிறைந்திருக்கும் அளவுக்கே ஆலயம் புனிதம் நிறைந்தது ஆகின்றது. கம்பராமாயணம் என்னும் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் தெய்வம் ஸ்ரீ ராமன் என்னும் முழுமுதற்பொருள். கம்பன் ஏனைய பாத்திரங்களை யெல்லாம் எப்படி அமைத்திருக்கின்றான் என்று ஆராய்கின்றவர்கள் மூலவஸ்து ஆராய்ச்சியில் அதிகம் கருத்தைச் செலுத்துவதில்லை. மூலவஸ்து ஆராய்ச்சியை முதலில் செய்தால் அதன் பிறகு

ஏனைய ஆராய்ச்சிகளில் நாம் புதியபொருள் களை நன்கு காணமுடியும். இதையும் ஓர் உபமானத்தைக்கொண்டு நன்கு விளக்க லாம். மூலவஸ்துவானது ஒன்று என்னும் இலக்கம். மற்ற பொருள்கள் எல்லாம் ஒருவிதத்தில் பூஜ்யங்கள் போன்றவை. ஒன்று என்னும் இலக்கத்தை முதலில் போட்டுக்கொண்டு அந்த இலக்கத்தைத் தொடர்ந்து பூஜ்யங்களை அமைக்கலாம். அப்படிச்செய்வதால் அந்த பூஜ்யங்களுக்கு மதிப்பு மிக வந்துவிடுகிறது. கோடி என்னும் எண்ணிக்கையில் ஒன்று என் னும் இலக்கத்தை முதலில் போட்டு அதைத் தொடர்ந்து ஏழு பூஜ்யங்களைப் போடுகிறோம். ஒன்றை முதலில் போட மறந்துவிட்டால் ஏழு பூஜ்யங்களும் வெறும் பூஜ்யங்களே. ஒன்று என்னும் இலக்கம் முதலில் அமைந்துவிட்டால் ஒவ்வொரு பூஜ்யத்துக்கும் சிறந்த மதிப்பு

வருகிறது. ராமாயணம் என்னும் இதிகாசத்தில் உலகிலே தென்படும் விதவிதமான பாத்திரங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அந்தப் பாத்திரங்களெல்லாம் வெவ்வேறு பாங்குகளில் மதிப்புப் பெறுவதற்குக் காரணம் ஸ்ரீ ராமன் என்னும் பாத்திரத்தோடு கொண்டுள்ள இணக்கமேயாம். ஸ்ரீராமனோடு இணக்கம் ஏற்படாதுபோய் விடுமிடத்து அப்பாத்திரங்கள் இருந்தும் இல்லாதவைகள் போன்று ஆய்விடுகின்றன. ஒவ்வொரு பாத்திரமும் ஸ்ரீராமனோடு எப்படிச் சம்பந்தப்பட்டது என்பதை விளக்கிக் காட்டுவது கவியரசனுடைய கடமை. அதை அவன் நன்குசெய்து முடித்திருக்கிறான்.

மூலப்பொருளாகிய ஒன்று என்னும் இலக்கத்தை மற்றொரு பாங்கில் நாம் ஆராய்ந்து அறிந்துகொள்ளுவது அவசிய

மாகிறது. துணிகளுக்குச் சாயம் ஏற்றும் சாயத்தொழிற்காரன் போன்றவன் மூலப் பொருள். சாயத்தொழிற்காரன் ஒருவன் இருந்தான். அவன் அற்புதமான வேலைக் காரன். ஒரே சாயத்தொட்டி அவனிட மிருந்தது. அதை வைத்துக்கொண்டு தன் தொழிலை மிகமிகத்திறம்பட அவன்செய்து வந்தான். வெவ்வேறு பாங்குடைய வாடிக் கைக்காரர்கள் அவனிடம் வந்தார்கள். பல துணிகளைக் கொண்டுவந்தார்கள். வித விதமான வர்ணங்கள் தோய்க்கப்பட வேண்டுமென்று வேண்டினார்கள். பச்சை நிறம் வேண்டியவனுக்கு அதே தொட்டி யில் துணியைத் தோய்த்துப் பச்சைநிறம் உண்டுபண்ணிக் கொடுத்தான். சிவப்புச் சாயம்வேஷ்டிக்கு வேண்டுமென்றவனுக்கு அதே தொட்டியில் தோய்த்துச் சிவப்பு நிறத்தை உண்டுபண்ணிக் கொடுத்தான். மஞ்சள்நிறம் வேண்டுமென்று கேட்டவ

னுக்கு அப்படியே செய்து கொடுத்தான். எத்தனைவிதமான நிறங்கள் வேண்டுமென்ருலும் ஒரு தொட்டியினிடத்திருந்தே அவன் உண்டுபண்ணிக் கொடுத்தான். அந்தச் சாயக்காரன் போன்றவன் ஸ்ரீராமன். ஸ்ரீராமனேடு தொடர்வுவைத்த பாத்திரங்களெல்லாம் அவரவர்க்குரிய நிறத்தில் இலங்குதற்கு ராமன் நன்கு துணைபுரிந்தான். ராமனேடு தொடர்வுவைத்த நல்லாரது நலம் தெளிவுபட விளங்கிற்று. ராமனேடு தொடர்வுவைத்த பொல்லார்களது பொலம் நன்குபுலனுயிற்று. விதவிதமான குணசீலர்கள், குணக்கேடர்கள், ஆகியவர்களை யெல்லாம் உலகத்தவர்க்கு விளக்கிக் காட்டுதற்கு ஸ்ரீராமன் முன்வந்தது அவனுடைய சரிதையாகும். அந்த சரிதத்தை உள்ளபடி படம் பிடித்துக் காட்டியது கம்பனுடைய கவிதைத் திறமையாகும்.

இராமனுடைய பண்பும், கம்பனுடைய கவிதைத் திறமையும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. ராமன் உயிர்; கம்பன் உடல். உடலின் மூலமாகவே உயிர் தன்னை விளக்கிக்கொள்ள முடியும். உயிர் ஆனது எவ்வளவு ஒண் பொருள் என்றாலும் அதற்கேற்ற உடல் அமையாவிட்டால் அது தன்னைத்தானே நன்கு விளக்கிக்கொள்ள முடியாது. இவ்வுண்மையை மொழியமைப்பிலும் காண்கின்றோம். மொழியமைப்பில் உயிரெழுத்து என்றும், மெய்யெழுத்து என்றும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. மெய்யெழுத்தின் துணையின்றி உயிரெழுத்து தன்னைத்தானே ஓரளவு விளக்கவல்லது என்பது உண்மை. ஆனால் அந்த உயிரெழுத்துக்கு எத்தனை விதமான மெய்யெழுத்துக்கள் துணையாக வந்தமைகின்றனவோ அதற்கேற்றவாறு அந்த உயிரெழுத்தின் விளக்கம் பலதரப்

பட்டதாகிறது. நமது வாழ்க்கைக்கும் இவ்வுண்மை பொருந்தும். உயிரும்உடலும் சேர்ந்தது நம்முடைய வாழ்க்கை. உயி ரற்றுப் போய்விட்டால் உடல் பிணமாய் விடுகிறது. உடலில்லாது உயிர்மட்டும் தன்னளவில் தன்னை விளக்கிக்கொள்ள முடியாது. உயிரும் மெய்யும் சேருகின்ற இடத்தே வாழ்வு என்னும்அதிசயச்செயல் நிகழ்கிறது. ராமாயணம் என்னும் இதி காசத்துக்கு ராமன் உயிர், கம்பன் மெய். உயிரும் மெய்யும் சேர்ந்து இத்தகைய அதிசயமான இலக்கியமாக நமக்கு வந்து வாய்த்திருக்கிறது.

ராமாயணத்தில் அமைந்துள்ள ஏனைய பாத்திரங்களெல்லாம் கோயிலில் அமைந் துள்ள வெவ்வேறு கட்டிடங்களுக்கு ஒப் பானவைகள். அவைகளை வேண்டிய வாறு பெருக்கவும், சுருக்கவும் முடியும்.

அப்படிப் பெருக்குவதையும், சுருக்குவதை யும் முன்னிட்டு சில்பியைச் சிலாகித்துப் பேசுவதும், சிறுமைப்படுத்துவதும் பொருந்தாது. பொழுது போக்குக்காக அல்லது விதவிதமான கலைஞானங்களில் ஈடுபடுவதற்கு அத்தகைய விஸ்தரிப்பு களில் நாம் மனதைச் செலுத்தலாம். ராமாயணம் என்னும் ஆலயத்தில் ஏனைய பாத்திரங்களை விளக்குகின்ற இடங்களில் வாசகர்களுக்கு விதவிதமான சுவைகளில் ஈடுபடுவதற்கும், கலைஞானங்களில் கருத் தைச் செலுத்துதற்கும், இலக்கியச் சுவை யில் லயித்திருப்பதற்கும் கம்பன் வேண் டியவாறு இடம் கொடுக்கிறான். ஆனால் ராம சொரூபத்தை விளக்க வருகிற இடங் களில் எல்லாம் கம்பனுடைய இயல்பு மாறிவிடுகிறது. கவிச்சக்கரவர்த்தியாக இருப்பதற்குப் பதிலாக அவன் தத்துவ ஞானி ஆய்விடுகின்றான். ஒரு ரிஷியின்

நிலை இயல்பாக அப்பொழுது அவனுக்கு வந்துவிடுகிறது. மெய்ப்பொருளை நேராக சாக்ஷாத்கரித்திருப்பவனே ரிஷி. ரிஷியைப் பற்றிய கூற்று ஒன்று உண்டு. ரிஷி ஒருவன் வேண்டுமென்றால் தன் புத்திரன் ஒருவனைப் பறிகொடுத்துவிடுவான்; ஆனால் அனுவசியமாக ஒரு பதத்தைத் தன் வாயினின்று அவன் வெளிப்படுத்தமாட்டான். குறைந்த சொற்களைக்கொண்டு நிறை பொருளை விளக்குவது ரிஷியின் இயல்பு. ராம சொரூபத்தை விளக்குகின்ற பொழுதெல்லாம் கம்பனுக்கு இத்தகைய ரிஷியின் இயல்பு வந்துவிடுகிறது. கடலைக் கடுகுக்குள் அடக்குவதுபோன்று அகண்டமாயுள்ள பரம்பொருளை கவிதை என்னும் கடுகுக்குள் கவிஞன் அடைத்து வைக்கிறான். அப்பொழுது மிகைபட்ட சொல் ஒன்றும் ஆங்கு இடம் பெறுவதில்லை. சில சொற்களைக்கொண்டு பரந்தகருத்துக்களை

உடைய பெரிய பொருள் விளக்கப்படு கிறது. மேலும் அதை விளக்கிக்கொண்டு போவது வியாக்கியானக்காரர்களுடைய வேலை. மூல தத்துவத்தை எடுத்துக்காட்டும் கவியோ பீஜம் அல்லது விதையை எடுத்து வழங்குகிறான். அதை மரமாக்கிக் கண்டுரசிக்கும்செயல் நம்முடையது. இதை முன்னிட்டே தெய்வத்தின் சொரூபத்துக்கு பீஜமந்த்ரம் என்பது ஒன்று உண்டு. ராமனுக்குரிய பீஜ மந்த்ரங்கள் போன்ற கவிதைகள் சிலவற்றைக் கம்பன் அமைத்துள்ளான். அவைகளை இப்பொழுது ஆராய்ந்து பார்ப்பது நம் கடமையாகும். அவைகளில் அடங்கியுள்ள உட்கருத்துக்களை வேண்டியவாறு விளக்கிக்கொண்டு போவதற்கு நமக்கு அவகாசமும் கிடைக்கிறது.

ராம சொரூபம் என்றால் என்ன? அது மண்ணுலகத்தவர்க்கு எப்படி வாய்த்தது?

அதனுல் மண்ணுலகத்தவர் அடையும் பயன் யாது? இந்தக் கேள்விகளுக்கு விடையாகக் கம்பனுடைய கவிதை ஒன்று வருகிறது. வசிஷ்ட முனிவர் தசரதனுக்கு எடுத்து இயம்புவது போன்று அது அமைந்துள்ளது. உண்மையில் ராமசொரூபத்தை விளக்கும் உபநிஷத் மந்த்ரம் போன்றது அது.

வார மென்னினிப் பகர்வது வைகலு மனையான்
பேரி னுல்வரு மிடையுறு பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனே வேதியர் முதலோர்
யாரும் யாஞ்செய்த நல்லறப் பயனென விருப்பார்.

ராமமூர்த்தியும் ராமமந்த்ரமும்ஒன்றே என்பது முதல் கருத்து. மூர்த்தியைக் காண்பது எல்லார்க்கும் இயலாது. மந்த்ரத்தைக் கேட்பதும் ஓதுவதும் எல்லார்க்கும் இயலும். ராம மந்த்ரத்தை யார் ஓதுகின்றார்களோ, அவர்களுக்கு இடையூறுகளெல்

லாம் மறைந்து பட்டுப் போய்விடுகின்றன. அந்த மந்த்ரத்துக்குரிய மூர்த்தியையே பெற்றுவிடுவது மந்த்ரத்தை ஓதுகின்றவர் களுக்கு எளிதாய்விடுகின்றது. தசரத ராமன் மண்ணுலகில் தோன்றுதற்கு முன்பே ராம மந்த்ரம் சான்ருேர் உள்ளத் தில்யாண்டும் நிலேத்திருந்தது. ஓம் என்னும் பிரணவம் போன்று ராம் என்னும் தாரக பிரம்ம மந்த்ரம் ஆதி அந்தமில்லாதது. சிவபெருமான் ஓயாது உச்சரித்துக்கொண் டிருப்பது ராம என்னும் தாரகமந்த்ரம். சிவசக்தியின் ஐக்கியத்தால் அது வந்துள் ளது. ஹரா + உமா ஆகிய இவ்விரண்டு சொற்களேயும் தொடர்ந்து உச்சரித்துக் கொண்டு போனுல் இவை இரண்டும் ஒன்றுபட்டு ராமா என்னும் மந்த்ரமாக மாறிவிடும். காசியின்கண் எழுந்தருளி யுள்ள சிவபெருமான் இந்த மந்த்ரத்தை காசியில் உடல் நீக்கும் ஜீவர்கள் காதில்

ஓதி அவர்களுக்குக் காசிமுக்தி தருகிறார் என்பது ஐதிகம். அத்தகைய புனிதமும் சக்தியும் வாய்ந்தது ராம மந்த்ரம்.

ராமருடைய காலத்திலேயே வாழ்ந்திருந்தவர் வால்மீகி மகரிஷி. ராம மந்த்ரத்தை இடையறாது உச்சரித்து ராம சொரூபத்தை அறிந்துகொள்கிற பேரறிவும் பேராற்றலும் அந்த மகரிஷிக்கு உண்டாயிற்று. அந்த மந்த்ரசக்தியால் அவர் ராமாயணம் என்னும் ஆதிகவியை அற்புதமாக அமைத்துள்ளார். அதே ராமர் காலத்தில் வாழ்ந்திருந்த சம்பாதிக்கு சூரியன் அருகில் சென்று சிறகுகள் எரிந்து பாழ்பட்டுப் போய்விட்டன. அந்தச் சம்பாதியின் முன்னிலையில் ஹனுமான் முதலிய வானரங்கள் ராம நாமத்தை உச்சரித்ததும் சம்பாதிக்கு இறகுகள் திரும்பவும் முளைத்துவிட்டன. இலங்கைக்குப் போவ

தற்குப் பாலம் கட்டவேண்டிய அவசியம் ஸ்ரீ ராமனுக்கு உண்டாயிற்று. ஆனால் அனுமானுக்கு அத்தகைய அவசியம் ஏற்படவில்லை. ஏனென்றால் அவனுக்கு ராம மந்த்ரத்தில் முழு நம்பிக்கையிருந்தது. அதை உச்சரித்துக்கொண்டு ஒரு தாண்டில் அவன் தாண்டிவிட்டான். ராம மந்த்ரத்தில் நம்பிக்கை வைக்கின்றவர்களுக்கு அத்தகைய ஆத்மபரிபாகம் வருகிறது. ராம மந்த்ரத்தை ஓதி பெருநிலைக்கு வந்துள்ள பெருமக்கள் எல்லாக் காலங்களிலும் இருந்திருக்கின்றனர். இந்த நவீன காலத்தில் ராம மந்திரத்தை ஓதி பெருநிலைக்கு வந்த பெருமக்களைப்பற்றி நாம் அறிவோம். விவேகானந்த சுவாமிகளின் உபாசனமூர்த்தி ஸ்ரீ ராமன். மஹாத்மா காந்தியின் உபாசனமூர்த்தி ஸ்ரீ ராமன். இவர்கள் இருவரும் ராம மந்த்ரத்தில் விசுவாசம் வைத்து அதை ஓதி எத்தகைய

பெருமக்கள் ஆயிருக்கிருர்கள் என்பதை இக்காலத்து மக்களாகிய நாம் பெரிதும் அறிந்துள்ளோம். இந்த ராமமந்த்ரத்துக்கு இத்தகைய பெரிய சக்தி இருக்கிறது என் பதை ‘பேரிஞல் வரும் இடையூறு பெயர் கின்ற பயத்தால்’ என்று கம்பன் பகர்கின் ருன்.

ஸ்ரீ ராமன் மண்ணுலகில் தோன்றி வந்ததற்கு முதல் காரணம் தானே என்று தசரத மன்னன் எண்ணக்கூடும். ஆனல் உண்மையில் அதற்கு முதற்கார ணம் தசரத சக்கரவர்த்தி அல்லன். கம்பன் பகர்கின்ருன்: வேதியர் முதலோர் யாரும் யாம் செய்த நல் அறப்பயன் என இருப் பார். ராமன் மண்ணுலகிலே தோன்றி வந்ததற்கு முதல் காரணமாயிருந்தது உலக மக்கள் அனைவருடைய நல் அறமே என்பதுதான் முடிவு. இங்கு ராமராஜ்யம்

என்பதற்கு விளக்கம் நமக்குக் கிடைக்கிறது. அரசன் ஒருவன் மேன்மகனுக இருப்பதற்கிடையில் குடிகளெல்லாம் கயவர்களாகப் போய்விடுவார்களானுல் ஆட்சி முறை சிறப்புற்று விளங்காது. நல்ல குடி மக்கள் கொடுங்கோல் மன்னனுக்கு ஆட்படும் நிர்ப்பந்தம் வந்துவிட்டால் அப்பொழுதும் சீரும் சிறப்பும் நிறைந்த வாழ்க்கையை இவ்வுலகில் காண முடியாது. கொற்றவனும் குடியும் மேன்மக்களாக இருக்கவேண்டும். மேன்மகனுகிய கொற்றவனுக்கு ஏற்ற மேன்மக்களாகிய குடிகள் அமைந்து விடுவார்களானுல் அவர்களுக்கு இடையில் நிகழும் ஆட்சி முறையே ராமராஜ்யம் என்பதாகும். ராமராஜ்யத்தை முடியரசு என்றும் மொழியலாம், குடியரசு என்றும் கூறலாம். பண்பட்ட முடியரசும், பண்பட்ட குடியரசும் உச்சநிலையில் ஒன்றுபட்டு விடு

கின்றன என்பதற்கு ராமராஜ்யம் சான்று ஆகிறது. நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் தாங்கள் செய்த தவத்தின் விளைவாக ராமன் வந்திருக்கிறான் என்று உணர்வார்களானால் குடிமக்களின் பண்பாடு அதினின்று சொல்லாமலே விளங்குகிறது.

பொதுமக்கள் நல்லாட்சி ஒன்றுக்குத் தங்களைத் தகுதி உடையவர்களாகச் செய்துகொண்டதும், நல்லாட்சியே உருவெடுத்துள்ள நன்மகன் ஒருவன் தங்களுக்கு வேந்தனாக வரவேண்டுமென்று விரும்பியிருந்ததும் அவர்கள் புரிந்த தவமாகும். அதுவே அவர்கள் பெற்றிருந்த பண்பும் பயிற்சியுமாகும். பொதுமக்களின் பண்பாடு எத்தகைய உயர்ந்தநிலையில் இருந்தது என்பதை அது நன்கு எடுத்துக்காட்டுகிறது. இனி அவர்களுக்குப் பிரதிநிதியாக இருந்த தசரத சக்கரவர்த்தியும் நோன்புகள் பல நோற்றார்; தவங்கள் பல புரிந்தார்; வேள்

விகள் பல வேட்டலில் ஈடுபட்டிருந்தார். அந்த அளவில் ஸ்ரீ ராமன் அவருக்குப் புதல்வனாக வந்தமைந்ததற்கு அவர் காரணமாகின்றார். அவர்களுடைய குடிகளை முதற் காரணமென்றும் அரசனாகிய அவனை இரண்டாவது காரணமென்றும் இயம்புவோமாகில் அதில் இழுக்கு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. பலருடைய தவத்தின் விளைவே இராமன் என்பது கோட்பாடு. இத்தகைய ராமன் அவதரித்திருப்பதால் மக்களுக்கு என்னென்ன பாங்கில் நன்மைகள் உண்டாயிருக்கின்றன, இனியும் உண்டாகப் போகின்றன என்னும் கோட்பாடுகள் அனைத்தையும் "வாரம் என் இனிப் பகர்வது" என்னும் கூற்றில் கம்பன் அடக்கி விடுகின்றான். வாரம் என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கின்றன. எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் தத்துவத்துக்கு அது முற்றிலும்

பொருத்தமானதே. வாரம் என்பதற்கு அன்பு என்பது ஒரு பொருள். குடிகளுக்கு ராமனிடத்து அன்பு இருக்கிறதா என்கின்ற கேள்வி கேட்கவும் வேண்டுமா? அவர்களுடைய தவப்பயனாய் வந்த செல்வனை அவர்கள் நேசிக்காது வேறு என் செய்வார்கள்! தாம் தாம் பெற்றெடுத்த புதல்வர்கள் குறைபாடு உடையவர்களாக இருப்பினும் அவர்களை நேசிப்பதுதான் பெற்றோர்களது இயல்பு. ஆனால் இங்கோ பொதுமக்களின் தவப்பயனாய் பரம் பொருளே மானுடவடிவில் வந்திருக்கின்ற பொழுது அவனிடத்து அன்பு கொள்ளாது அவர்கள் வேறு என்ன செய்ய முடியும் என்பது கருத்து. காந்தத்தினிடத்து ஊசிக்குக் கவர்ச்சி ஏற்படுவது போன்று உயிர்களுக்கு ராமனிடம் இயல்பாக அன்பு உண்டாகிறது.

வாரம் என்னும் சொல்லுக்கு இனி இசைப்பாட்டு என்றும் தெய்வப்பாடல் என்றும் பொருள்கள் கூறலாம். பாடல்கள் பல பாடி தெய்வத்தை வணங்கலாம்; மனதைச் சாந்தப்படுத்தலாம். மக்கள் நிம்மதியைப் பெறலாம். ராம மந்த்ரத்தை அடையப்பெற்றவர்களுக்கு இனி அத்தகைய பாடல்களுக்கும், ஸ்தோத்திரங்களுக்கும் அவசியமில்லாது போய்விட்டது என்கின்ற கருத்து இதில் அடங்கியிருக்கிறது. கொஞ்சகாலத்துக்கு முன்பு வட இந்தியாவில் சாது ஒருவர் இருந்தார். அவர் பெரிய புஸ்தகம் ஒன்றைக் கையில் வைத்திருந்தார். அருட்பாக்கள் பல அப்புஸ்தகத்தில் இருக்கலாம் என்று மற்ெறாரு சாது எதிர்பார்த்தார். அப்புத்தகத்தைத் தாம் பார்க்கவிரும்பினார். அது அவர் கையில் வைக்கப்பட்டது. திறந்து பார்த்தார். பக்கம் பக்கமாகப் பார்த்தார்.

ஆதியோடந்தம் பார்த்தார். என்ன ஆச்சரியம்! ஒவ்வொரு பக்கத்திலும் ராம என்கின்ற மந்த்ரம் மட்டும் பெரிய எழுத்தில் ஒரே தடவை பொறிக்கப்பெற்றிருந்தது. இதற்கு இவ்வளவு பெரிய புஸ்தகமா என்று புதிதாகப்பார்த்தவர் வியந்தார். அதை வைத்திருந்த விப்ரர் பகர்ந்ததாவது: "வேதங்கள் அனைத்துக்கும் முடிவாகிய பொருள் ராமனைத்தவிர வேறு என்ன இருக்கிறது?" ஆதலால்தான் வாரம் என் இனிப்பகர்வது என்று கம்பன் கேட்கிறான்.

வாரம் என்பதற்கு உரிமை என்னும் பொருள் ஒன்று உண்டு. மக்களாகிய நாம் நிலத்தில் உரிமைபாராட்டுகின்றோம், செல்வத்தில் உரிமைபாராட்டுகின்றோம், ஒரு சிறிய அளவு நீரில் உரிமை பாராட்டுகின்றோம். ஆனால் காற்றில் நாம் யாரும்

உரிமை பாராட்டுவதில்லை. அதற்குக் காரணம் ஒன்று உண்டு. காற்று எங்கும் அகப்படக்கூடியது. அது எல்லையில் அடங் காதது. அந்தக் காற்றிலும் பெரியது வெட்டவெளி. வெட்டவெளியை மெய் யென்று இருப்பவர் அதில் பட்டாங்கம் அல்லது உரிமை பாராட்டுவதில்லை. அந்த வெட்டவெளிக்கும் பெரிய பொருள் ராமன். அகிலத்துக்கும் அவன் அந்தராத் மன். ஆகையினால் அவனை யாரும் தன்னு டைய தனிச் செல்வன் என்று உரிமை பாராட்ட முடியாது. அந்த உரிமை தசரத னுக்கே கிடையாது என்பதை வாரம் என் இனிப் பகர்வது என்று கம்பன் குறிப்பிடு கின்றான்.

வாரம் என்பதற்குப் பக்ஷபாதம் என் பது மற்றொரு பொருள். உலக மக்கள் பொதுவாகத் தங்கள் உற்றார் உறவினரி

டத்து ஓரளவு சார்புடையவர்களாய் இருப்பது இயல்பு. பகைவர்களிடத்தும், வேற்றூர்களிடத்தும் பாராமுகமாய் இருப்பதும் உலகத்தவரது இயல்பு. ஆனால் ராமனே தசரதனை அலாதியாக நேசித்தான், ராவணனை வெறுத்தான் என்று ராமனுடைய மெய் இயல்பை அறிந்த மேலோர் சொல்லமாட்டார்கள். ஏனென்றால் ராமனே அண்டநாயகன், வேதநாயகன், அனைத்துக்கும் அவனே மூலப் பொருள். யாரிடத்தில் அவன் பக்ஷபாதம் காட்டப்போகிறான்? பக்ஷபாதம் எதையும் அவன் அறிந்திலன். ஆதலால் அவனைக் குறித்து வாரம் என் இனிப்பகர்வது என்று கம்பன் களிகூறுகிறான்.

வாரம் என்பதற்குத் தடை என்பது மற்றொரு பொருள். வழியில் நடந்து செல்லுகிறோம். பேர் ஆறு ஒன்று குறிக்

கிடுகிறது. ஓடம் ஒன்றுமில்லை. நடப்பவர்க்கு ஆறு தடைசெய்கிறது. ஐம்பெரும் பூதங்களில் ஆறு ஒன்று. ஒவ்வொரு பூதமும் தன் போக்கில் தடைசெய்ய வல்லது. பூதங்கள் அனைத்துக்கும் மூலப் பொருள் பரமாத்மா. ராமன் என்னும் வடிவில் அப்பரமாத்மா அவதரித்திருக்கிறார். இந்த ராமனுடைய சகாயத்தைப் பெற்றவர்க்கு இம்மண்ணுலகில் ஏதாவது தடை ஏற்பட்டிருக்கிறதா? ராமனுடைய சகாயத்தைப் பெறுதவர்களுக்கு ஏனைய வசதிகளெல்லாம் அமைந்திருந்தவிடத்தும் பெருநலம் ஏதேனும் உண்டாயிற்ரு? கடவுளுடைய அருளுக்குப்பாத்திரமானவர்களுக்குத் தடையொன்றுமில்லை என்னும் கோட்பாட்டை வாரம் என் இனிப் பகர்வது என்று கம்பன் பொறித்துள்ளான்.

வாரம் என்பதற்குத் தடவை என்னும் பொருள் ஒன்று உண்டு. ராம நாமத்தை எத்தனை தடவை உச்சரித்தால் நாம் விமோசனம் அடையலாம் என்னும் கேள்வி எழக்கூடும். இத்தகைய கேள்வி யோடு கூடிய நிகழ்ச்சி ஒன்று முன்பொரு காலத்தில் நிகழ்ந்தது. தனக்குற்ற ஐயம் ஒன்றை அகற்றிக்கொள்ளுதற்கு ஆத்ம சாதகன் ஒருவன் ஒரு ரிஷி ஆஸ்ரமத்திற் குச்சென்றான். அவன் போனபொழுது ரிஷி ஆஸ்ரமத்தில் இல்லை. எங்கேயோ வெளியில் சென்றிருந்தார். ரிஷி புத்திரன் மட்டும் ஆஸ்ரமத்தில் இருந்தார். வந்தவன் ரிஷி புத்திரனிடம் தன் கேள்வியைக்கேட் டான். ஜன்மசாபல்யமடைவதற்கு உற்ற உபாயம் யாது என்பது கேள்வி. நாள் தோறும் ராமநாமத்தை மூன்று தடவை உச்சரியும் என்று சொல்லியனுப்பினார் ரிஷிபுத்திரன். பின்பு நிகழ்ந்த வரலாற்றை

ரிஷி திரும்பி வந்தானபிறகு புத்திரன் தெரிவித்தான். அப்பொழுது ரிஷி பகர்ந் தார்: "ராமநாமத்தில் உனக்கு விசுவாசம் போதாது. அதை ஒருதடவை பகர்ந்தால் போதாதா? உலர்ந்த வைக்கோல்போருக்கு மூன்று தடவை தீ வைக்கவேண்டுமா? கர் மத்தைக் கொளுத்துதற்கு ராமநாமத்தை ஒரு தடவை உச்சரித்தால் போதாதா?" என்றார். இக்கோட்பாட்டை வாரம் என் இனிப்பகர்வது என்று கவியரசன் கேட் கிறான்.

வாரம் என்பதற்கு வேதசந்தஸ் என்பது மற்றொரு பொருள். ஓயாது வேதம் ஓதி மனதைப் பண்படுத்தலாம் என்பதுண்மை. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண் டாம் என்னும் கோட்பாடு அதை முன் னிட்டே வந்தது. வேதங்களுக்கே மூலப் பொருள் ராம மந்த்ரம். அதை உச்சரிக்

கின்றவர்களுக்கு வேதங்களை ஓதிக்கொண் டிருக்கவேண்டிய அவசியமில்லை. வேதங் களை ஓதுதலில் குறை குற்றங்கள் வந்து விடலாம். அதைக் கற்றுக்கொள்ளுதலி லும் சிரமமதிகம். ஆனால் ராம மந்த்ரமோ வாயில் நுழையாத வேடனுக்கும் பொருத்தமான மந்த்ரமாக நாளடைவில் அமைந்துவிட்டது. அவ்வளவு எளிமை யும், இனிமையும், வல்லமையும் ராம மந்த்ரத்தில் இருக்கின்றபொழுது வேத சந்தஸ் என்னும் வாரம் என் இனிப்பகர் வது என்று கம்பன் கேட்கிறான். ராமமந்த் ரத்திலும், அந்த மந்த்ர சொரூபமாகிய ராமனிடத்திலும் இத்தனை விதமான மகி மைகளெல்லாம் இருக்கின்றன என்பதை ஒரு கவிதையைக்கொண்டு கம்பநாட்டாழ் வான் விளக்கியுள்ளான்.

ராமாயணத்தில் வருகின்ற ஒவ்வொரு பாத்திரமும் ஏதேனும் ஒருவிதத்தில்

ராமனேடு தொடர்பு வைக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்படித் தொடர்வு வைப்பதன்மூலம் அந்த ஜீவனுடைய முன்னேற்றம் பலபடி மேலே போகிறது. எல்லா ஜீவர்களும் அறிந்தோ அறியாமலோ பரம்பொருளை நோக்கிப் பயணம் போய்க்கொண்டிருக்கிறுர்கள். அந்தப் பயணத்தை விரைவில் பூர்த்திபண்ணுவது வாழ்க்கையின் குறிக்கோள் ஆகும். பலஜீவர்கள் பல தடவைகளில் பின்னேக்கிப் போகவும் செய்கின்றனர். மேலும் மேலும் முன்னேக்கிப் போவதே நல்வாழ்வின் பயன் ஆகும். இராமனைச் சந்திப்பதினுல் ஒவ்வொரு ஜீவனும் தன் பயணத்தில் வெகுதூரம் மேல்நோக்கிப் போகவல்லவன் ஆகின்ருன். சாயக்காரனுடைய சாயத்தொட்டியில் வெவ்வேறு துணிகளைத் துவைத்தெடுத்து விதவிதமான நிறங்களைப் பெறுவதைப் போன்

றது அம்முன்னேற்றம். இத்தனைவித மான பாத்திரங்களுள் வாயுகுமாரனாகிய ஆஞ்சநேயன் அலாதியான ஸ்தானம் பெறுகிறான். ஒருவேளை அவன் ராமனைச் சந்தியாது போயிருந்தால் அவனுடைய வாழ்க்கையில் அவனுக்கு என்ன குறை ஏற்பட்டிருக்கும் என்னும் கேள்வி எழக் கூடும். ஆஞ்சநேயன் ஒருவன் விஷயத் தில்மட்டும் ராமனைச் சந்தியாதவிடத்தும் அவன் குறைவில்லாத நிறைநிலையிலே இருந்திருப்பான் என்று உறுதி கூறலாம்.

விரதங்களுள் பெரியது பிரம்மசரிய விரதம். அந்த விரதத்துக்குப்பெரிய எடுத் துக்காட்டு ஆவான் ஆஞ்சநேயன். நித் திய பிரம்மசாரி என்றும் நைஷ்டிக பிரம்ம சாரி என்றும் அவன் பிரசித்தி பெற்றவன். பொறிபுலன்களை யெல்லாம் அவன் நன்கு வென்றவன். இவ்வுலக சம்பந்தமான

ஆசை எதுவும் அவனுக்குக் கிடையாது. நெறியான வாழ்க்கைக்கு அவன் தக்க தோர் எடுத்துக்காட்டு ஆகிறுன். கல்வி கேள்விகளில் அவன் தலைசிறந்தவன். அவ னுக்கு நிகரான பண்டிதன் ஒருவனைக் காண்பது அரிது. பண்டிதன் என்று சொல்லுமிடத்து வெறும் ஏட்டுக்கல்விப் பண்டிதன் அல்ல; கற்ற கல்வி அனைத்தை யும் தன் வாழ்க்கை சொரூபமாக மாற்றி யமைத்த பெருமகன் ஆவான் ஆஞ்ச நேயன். அவனுடைய அறிவுத் திறனுக்கு ஏற்ற பேராற்றலும் அவனிடத்திருந்தது. சின்னஞ்சிறு வயதிலேயே சூரியனை ஒரு விளையாட்டுக்கருவி என்று கருதி அதைத் தாவிப்பிடிக்க முயன்றவன். விரும்பினுல் எந்த உலகத்துக்கு வேண்டுமென்ருலும் பாய்ந்து செல்லும் பேராற்றல் தன்னிடத் திருந்தது என்று அவன் நன்கு உணர்ந் தான். மஹாவீரன் என்று அவனையே

மொழியலாம். அவன் தனக்கென்று வாழவில்லை. தான் சந்தித்த உயிர்களுள் நேர்மையில் நிலைநின்றவன் சுக்ரீவன் என்று அவன் உணர்ந்திருந்தான். அந்த சுக்ரீவனுக்கென்றே தன்னுடைய வாழ்வையும் சேவையையும் ஒப்படைத்திருந்தான். நிஷ்காமிய கர்மத்துக்கு அது நல்லதொரு சான்று ஆகும். தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருமகன் அவன். ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் இராமனையும் லக்ஷ்மணனையும் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் சுக்ரீவனுடையசிறு கூட்டத்துக்கு மதங்கமுனிவரின் ஆச்ரமத்தின் எல்லைப்புறத்தில் வந்துவிட்டது. காண்பதற்கரிய இவ் இரு மூர்த்திகளையும் கண்டதும் சுக்ரீவனும் அவனுடைய ஏனைய சகாக்களும் பயந்துபோய் பறந்தோட யத்தனித்தனர். ஹனுமான் உடனே அவர்களைக் கட்டிப்பிடித்தான்.

அப்படிப் பயந்து ஓடுவது பொருந்தாது என்ருன். அதற்குப் பதில் சொல்ல இயலாதவர்களாய் 'வேண்டுமாளுல் நீ அருகில் சென்று அவர்கள் யார் என்று அறிந்துவா. கண்ணெடுத்து அவர்களேக் காணவும் எங்களுடைய அச்சம் எங்களுக்கு இடந் தருவதில்லே' என்று இயம்பிவிட்டு அவர்கள் ஓடி மறைந்துவிட்டனர். மஹாவீரளுன ஹனுமான் தனியாக நடந்து வந்தான். அந்த நடையிலேயே ஓர் உறுதி வெளியாயிற்று. கண்ணெதிரே தென்பட்ட காளேகள் இருவரையும் உற்று நோக்கினுன். தன் மனதில் எழுந்த எண்ணத்தை வெளியிட்டான். அதைக் கம்பன் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிருன். அது என்ன என்று நாம் பார்ப்போம்:

துன்பினேத் துடைத்து மாயத்
தொல்வினே தன்னே நீக்கித்

தென்புலத்தன்றி மீளா நெறி
யுய்க்கும் தேவரோ தாம்
என் பெனக் குருகுகின்ற
திவர்கின்ற தளவில் காதல்
அன்பினுக் கவதியில்லை யடைவென்
கொலறிதல் தேற்றேன்

உயிர்களெல்லாம் தங்களுக்கு உற்ற துன்பங்களையெல்லாம் துடைக்க முயலு கின்றன. உலர்ந்த நிலத்தில் எடுத்துப் போடப்பட்ட மச்சம் ஒன்று ஈரநிலத்தை நாடித்துள்ளிக்குதிக்கிறது. ஈரநிலத்துக்குப் போய்விட்டால் அதனுடைய துன்பம் ஓரளவு துடைக்கப்படுகிறது. சேற்றினுள் போய்விட்டால் அதனுடைய துன்பம் இன்னும் கொஞ்சம் துடைக்கப்படுகிறது. ஒரு சிறு நீர்நிலையை அடைந்துவிட்டால் மீனின் மயக்கம் மேலும் மறைகிறது. அதற்குப் பொருத்தமான பரந்த நீர்நிலை

யினுள் வந்துவிட்டால் அது பெருமகிழ்வுற்றிருக்கிறது. உயிர்களின் வாழ்க்கையும் இத்தகையது. துக்கத்தோடு மனிதன் தன்னுடைய அறியாமையினுல் புணர்ந்து கொண்டான். அந்தத் துயரத்தினின்று தன்னை விடுவித்துக்கொள்வது அவனுடைய முதல் கடமையாகும். துன்பத்தினின்று தன்னை விடுவித்துக்கொள்வதே ஒருவித இன்பம். இனித் துன்பம் எவ்விதத்திலும் வடிவெடுத்து வருவதற்கு இடமில்லை என்ருல் அது பெறுதற்கரிய பேறு ஆகிறது. அத்தகைய பேறு தனக்குக் கிட்டிவிட்டது என்று ஆஞ்சநேயன் எடுத்த எடுப்பிலேயே துன்பினைத் துடைத்து என்னும் சொல் தொடரால் விளக்கிவிடுகிருன். இங்கு பரிபக்குவம் அடைந்துள்ள ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் தொடர்வுவந்துவிட்டது. பேரின்பமே சொரூபமாய் இருப்பவன் பர

மாத்மன். அவனைச்சாருமிடத்து ஜீவாத் மனுக்கும் தனது நிஜ சொரூபமாகிய ஆனந்தம் மேலிடுகிறது. அதை எதிர் மறையில் சொல்லுமிடத்து துன்பினைத் துடைத்துவிடுதல் என்பதாகிறது. அதைத் தான் ஆஞ்சநேயன் இங்கு இயம்புகின்றான்.

செக்குமாடுகள் இரண்டு இருக்கின் றன. அவைகளைச் செக்கில் கட்டி வணிகன் ஓட்டுகிறான். மாடுகளின் கழுத்தில் இருக் கும் நுகத்தடியின்முன் மற்றொரு கழியை நீட்டிக் கட்டுகிறான். அக்கழியின் நுனி யில் கொஞ்சம் புல்லைக் கத்தையாகக் கட் டித் தொங்கவிடுகிறான். அக்கத்தை காளை களின் கண்ணெதிரே தென்படுகிறது. அதைப் பற்றிப்பிடித்துத் தின்ன காளை கள் தலையை நீட்டுகின்றன. வணிகன் அவைகளை ஓட்டுகிறான். இன்னும் கொஞ் சம் முன்னுக்கு நடந்து சென்றால் புல்

அகப்பட்டுவிடும் என்று காளைகள் நினைக்கின்றன. அப்படி நினைத்துக்கொண்டே அவைகள் வட்டமிட்டுப் போய்க் கொண்டே இருக்கின்றன. அப்படி வட்டமிட்டுப் போவது தொல்வினை. எவ்வளவுதான் வட்டமிட்டாலும் புற்கத்தையை எட்டமுடியாது. நடப்பதை நிறுத்திவிட்டுத் தான் சுமந்துசென்ற புல்கத்தையைத் தனக்கு உரியதாக்கிக்கொள்கின்ற இடத்து அதை நாடிச் செல்லுதல் என்ற வினை முற்றுப்பெற்றுவிடுகிறது. இன்னும் கொஞ்சம் நடந்து சென்றால் புல் அகப்பட்டுவிடும் என்று எண்ணிய எண்ணம் மாயா காரியமாகும். இச்செயலைத் தான் ஜீவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். வினையின் விளைவாக பல பிறவிகளை ஜீவர்கள் எடுத்தாய்விட்டது. வினையின் விளைவாக இன்னும் பல பிறவிகளை ஜீவர்கள் ஓயாது எடுத்துக்கொண்டே போக

லாம். ஆனால் ஞானத்தின் விளைவாக வினையை நீக்கிவிடுமிடத்து பிறவிப் பெருங் கடலும் அப்பொழுதே நீந்தப்பெற்றது ஆய்விடுகிறது. ஆஞ்சநேயனுக்கு அத் தகைய பரஞானம் வந்துவிட்டது. ஆத லால் வினை நீங்கிப் போய்விட்டது என்கின்றான்.

பரஞானம் மற்றொரு பேருண்மையை ஜீவனுக்கு விளக்குகின்றது. தனக்குப் பிறப்பு இறப்பு எண்ணிறந்தன இருந்த தாக ஜீவன் அக்ஞானத்தால் எண்ணி வந்தான். அது நீண்டதோர் கனவு. நிகழாதவைகளை நிகழ்பவைகள்போன்று காட்டுவது கனவு. ஒருவனுக்கு ஒரு கனவு தோன்றிற்று. யாரோ ஒருவன் வந்து நீண்டவாளால் தன்னை மார்பில் ஓங்கிக் குத்திவிட்டான். வாளும் நெஞ்சைப் பொத்துக்கொண்டு பின்புறம் வந்துவிட்

டது. செத்தொழிந்தேன் என்று கதறிக் கொண்டு கீழே விழுந்தான். படுத்திருந்த வன் அப்படிக் கனவு கண்டதால் காலை ஓங்கித்தரையில் அடித்தான். அடியுண்டு விழித்தெழுந்தான். தான் குத்துண்டது கனவு என்று உணர்ந்தான். நெஞ்சைத் தொட்டுப்பார்த்தான். கத்தியுமில்லை, ரத்தமுமில்லை. செத்துப்போனதாக வெறு மனே கற்பனை செய்தான். சாகாதவன் தன்னைச் செத்துப்போனதாக எண்ணிக் கொண்டது கனவு. இத்தனைவிதப் பிறவி களும் அக்கனவு போன்றவைகளேயாம். மெய்ஞானம் வரும்பொழுது கனவினின்று விழித்துக்கொண்டதற்கு அது சமான மாகிறது. அத்தகைய ஞானம்வந்த ஆஞ்ச நேயன் பாரமார்த்திகப் பெருநிலையைத் தான் அடைந்துவிட்டதாக உணருகிறான். அக்கருத்தைத் தென்புலத்து அன்றி மீளா நெறி உய்க்கும் என்கின்றான். அத்தகைய

பரஞானத்தை உண்டு பண்ணியவர்கள் இராமனும் அவனுடைய தம்பியுமாம். உலர்ந்த விறகுக்கட்டையில் எரிந்து கொண்டிருக்கின்ற விறகுக்கட்டை தீயை மூட்டிவிடுவது போன்றது அவர்கள் செய்த செயல். அவர்களைக் குறித்துத் தேவரோதாம் என்கின்றான் ஆஞ்சநேயன்.

அந்த ஞானச்சுடர் ஜீவசொரூபத்தைப் படிப்படியாக பரசொரூபம் ஆக்குகிறது. அது இனிமையே வடிவெடுத்த செயல். அதன் பகுதிகள் பல இருக்கின்றன. அப் பகுதிகளை யெல்லாம் ஆப்தவாக்கியம் போன்று ஆஞ்சநேயன்பகர்கின்றான். என்பு எனக்கு உருகுகின்றது என்பது முதல் வாக்குமூலம். துன்பத்தீயில் என்பு உருகுமாகில் அது சகிக்கமுடியாத உருக்கம். ஞானக்கனலில் அது உருகுமாகில் பேரின்பம் பெருக்கெடுக்கிறது. ஊன்

உடம்பு ஞானுக்கினியில் உருகுமளவு ஞான ஒளி சுடர்விடுகிறது. அதைத்தான் ஆஞ்சநேயன் இங்கு என்பு எனக்கு உருகு கிறது என்கின்றான்.

எட்ட இருக்கின்றபொழுதும் காந்தம் ஆனது ஊசியைக் கவர்கிறது. பக்கத்தில் வருகின்றபொழுது அது கவர்கின்ற கவர்ச் சிக்கு வேகம் அதிகம் உண்டாய்விடு கிறது. மிகப்பக்கத்தில் போய்விட்டால் ஊசி வேறு எங்கும் திரும்பமுடியாது. காந்தத்தைத் தொட்டே ஆகவேண்டும் என்கின்றநிலை அதற்கு வந்துவிடுகிறது. பரமாத்மனுக்கு அண்மையில் வந்துவிட்ட ஜீவனுடைய நிலையும் அத்தகையது. இக்கோட்பாட்டை இவர்கின்றது அளவு இல் காதல் என்று ஆஞ்சநேயன் இயம்பு கின்றான்.

உயிர்களுக்கிடையிலுள்ள அன்பை ஏதேனும் ஒருவிதத்தில் அளந்தெடுத்து

விடலாம். சில நெருக்கடிகளில் உயிர்களுக் கிடையிலுள்ள விருப்பமானதுவெறுப்பாக மாறிவிடுகிறது. ஜீவாத்மனுக்குப் பரமாத் மாவிடத்து ஊற்றெடுக்கும் அன்பு ஆனது அத்தகைய எல்லை ஒன்றிலும் அடங்கிவிடு கிறதில்லை. அது அளப்பரிய பேரன்பு ஆகிவிடுகிறது. அந்தப் பேரன்பு சொரூபத் தைச் சொல்லால் விளக்கியாகவேண்டும். மிக வெற்றிகரமாக அதை ஆஞ்சநேயன் சொல்லிவிடுகின்றான். அன்புக்கு அவதி இல்லை என்பது அவனுடைய வாக்கு மூலம்.

கணக்கற்ற ஆட்டுக்குட்டிகள் கொடாப்பில் அடைத்துவைக்கப்பட்டி ருக்கின்றன. அவைகளின் தாய் ஆடுகள் மேயச்சென்றிருக்கின்றன. மாலையில் தாய் ஆடுகள் திரும்பிவந்ததும் கொடாப்பு திறக்கப்படுகிறது. குட்டிகளெல்லாம்

தத்தம் தாய் இடம் ஓடுகின்றன. அங்கு ஒரு அதிசயத்தைக் காண்போம். குட்டி தன் தாயை எளிதில் கண்டுபிடித்துவிடுகிறது; தாயும் தன் குட்டியை எளிதில் கண்டுபிடித்துவிடுகிறது. அதைவிடப் பன்மடங்கு உறுதியானது ஜீவாத்மனுக்கும் பரமாத்மனுக்கும் உள்ள இணக்கம். பரமாத்மனைக்கண்டதும் இவன் தன் தலைவன் என்று ஜீவாத்மன் உணர்ந்துகொள்கிறான். அந்த ஜீவாத்மனைப் பரமாத்மன் அனுக்கிரகத்தோடு தன்னிடத்துச் சேர்த்துக்கொள்கிறான். இவ்வரிய செயலை அடைவு என் கொல் என்னும் சொல்லால் ஆஞ்சநேயன் விளக்குகிறான். இங்ஙனம் தனக்கும் தன்னை ஆட்கொள்ளுதற்கென்றே வந்துள்ள தலைவனுக்கும் இடையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் ஆஞ்சநேயன் சொல்லியாய்விட்டது. தான் முற்றிலும் தன் தலைவனுக்கு உரியவன்

ஆய்விட்டான். அந்தப்பேரானந்த நிலையை மேலும் சொல்லால் விளக்க இயலாதவன் ஆய்விடுகிறுன். அறிதல் தேற்றேன் என்னும் சொல்லில் அதை முடித்துவிடுகின்றுன். ஜீவாத்மனேப் பரமாத்மன் ஏற்றுக் கொள்ளும்பொழுது நிகழ்கின்ற அனுபவம் முழுதும் இந்த ஒரு பாட்டில் அடங்கிவிடுகின்றது.

வாலிக்கும் ஸ்ரீராமனுக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கம் அலாதியானது. சர்வ சாதாரணமாக உலகிலே இரண்டு ஆத்மாக்களுக்கிடையில் ஏற்படும் இணக்கம் போன்றது அது. இராமனேக் காண்பதற்கு முன்பு வாலி அவன்மீது மரியாதை மிக வைத்திருந்தான். அவன் தன்னிடத்து வந்தால் தோழனுக வருவான் என்பது அவன் கட்டிய மனக்கோட்டை. பின்பு ஒருவேளை எதிரியாக வந்துவிட்டாலும்

அதைக்குறித்துப் பயமில்லை. ஏனென்றால் தான் பெற்றிருந்த வரம் தனக்குப் பெருந் துணை. எதிரியாக யார் வந்தாலும் வரு பவனது பலத்தில் பாதி தன்னுடையதா கிறது. அதற்குமேல் தன்னுடைய சொந்த பலமும் உண்டு. ஆதலால் எதிரியைமடக்கு வது மிக எளிது. அப்படி வாலி பெற் றிருந்த வரம்தான் அவனிடத்தில் வீண் கர்வத்தை உண்டுபண்ணிவிட்டது. யாருக் கும் தலைவணங்காத செருக்கு அவனிடத் தில் தோன்றிவிட்டது. தம்பியைப் புறக் கணித்து அவனைத்துன்பத்திற்கும் ஆளாக் கியதற்குக் காரணம் அந்த வரமேயாம். அவனிடத்திருந்து அவன் பெற்றவரத்தை விலக்கியாகவேண்டும். அதற்கேற்ற உபா யத்தை ஸ்ரீராமன் கையாண்டான்.

நேரில் வாலியைச் சந்திக்கவில்லை. வாலி யின் மனைவி மூலமாக அவனுக்கு எச்ச

ரிக்கைவருகிறது. அதை அவன் பொருள் படுத்தவில்லை. தன் தம்பியுடன் இரண்டாம் முறை வாலி போர்புரிகிறான். தம்பி திரும்பவும் தோற்றுப்போய்விடும்தருவாய் வந்துவிட்டது. அந்த நெருக்கடியில் மறைவிலிருந்து ஸ்ரீராமன் தன் பாணத்தை அனுப்புகிறான். வாலியின் நெஞ்சை அது துளைத்துவிட்டது. அம்பை ஒரு கையில் பிடித்துப் பார்க்கிறான். அது யாருடையது என்று தெரிந்துகொள்கிறான். சிறிது நேரத்திற்குச்சீற்றம். இப்பொழுது ராமன் நேரில் வருகிறான். இருவர்க்குமிடையில் பேச்சுவார்த்தை நிகழ்கிறது. ராமன் விரைவில் வாலியைச் சமாதானப்படுத்தி விடுகின்றான். தான் செய்தது குற்றம், ராமன் செய்ததே அறச்செயல் என்பதை வாலி உணர்கிறான். சாவதற்கு முன்பு அவனுடைய வாக்குமூலம் வருகிறது. சட்டபூர்வமாகப்பார்க்குமிடத்து சாகின்ற

வனுடைய சொல் மிக முக்கியமானது. அவனுடையசொல்லை அனுசரித்தே சட்டமும் நடவடிக்கை எடுக்கிறது. வாலியினுடைய வாக்குமூலம் எது என்பதைப் பார்ப்போம்.

தோன்றலு மிறத்தல் தானும்
துகளறத் துணிந்து நோக்கின்
மூன்றுலகத்தி னோர்க்கு மூலத்தே
முடிந்த வன்றே
யான் தவமுடைமையால் இவ்விறுதி
வந்திசைந் தியார்க்குஞ்
சான்றென நின்றவீரன் தான்
வந்து வீடு தந்தான்.

சாகின்றவனுடைய பதைபதைப்பையோ சித்தப்பிரமையையோ ஈண்டு நாம் காண்பதில்லை. முனி ஒருவன் வாழ்க்கைத் தத்துவத்தை அமைதியான மனநிலையில் இருந்து கொண்டு பகர்வதுபோன்று இருக்கிறது வாலியின் கூற்று. அவனுடைய இறுதிக்

காலத்தில் அவன் முனி ஆய்விட்டான் என்றே இயம்பலாம். நிறை ஞானமும் அவனுக்கு வந்துவிட்டது. அதன் அறிகுறிகள் யாவும் அவன் சொல்லில் அடங்கிக்கிடக்கின்றன. துகள் அறத் துணிந்து நோக்கின் என்னும் நிபந்தனையை அவன் போட்டுவிடுகின்றான். இந்த நிபந்தனை உயிர்கள் அனைத்துக்கும் பொதுவானது. துகள் அற என்னும் சொல் குற்றங்கள் இல்லாமல் என்று பொருள்படுகிறது. நாம் காணும் காட்சிகள் எல்லாம் துகள் உற்ற காட்சிகள். ஞானியர் காணும் காட்சிகளெல்லாம் துகள் அற்ற காட்சி. துகளற்ற காட்சி மெய்க்காட்சி; துகளுற்ற காட்சி பொய்க்காட்சி அல்லது திரிவுபட்ட காட்சி. இதுவே ஞானிக்கும் அக்ஞானிக்கும் இடையில் உள்ள வேற்றுமையாம். கணக்கு ஒன்றுக்குச்சரியானவிடைஒன்றே. தப்பான விடைகளோ கணக்கற்றவை

களாக இருக்கமுடியும். அக்ஞானத்தில் இருக்கும் ஜீவர்களின் துகள் உற்ற நிலை கள் பலப்பல. ஞானிகளின் துகளற்ற நிலை ஒன்றே. மனத்துக்கண் உள்ள மாசை அகற்றுவது நம் குறிக்கோள். மனத் தகத்து மாசு அகலப்பெறின் மெய்க்காட்சி தானே வந்துவிடுகிறது. பலநிறமுடைய கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டு வெளி உலகைப் பார்த்தால் இல்லாத பல நிறங் கள் ஆங்கு இருப்பனபோன்று காட்சி தருகின்றன. குற்றமற்ற கண்ணாடியுடன் புற உலகைப் பார்க்குமிடத்து உள்ளது உள்ளபடி தோன்றுகிறது. ஞானம் குற்ற மற்ற கண்ணாடி போன்றது. துகளற்ற காட்சி ஞானிக்கு வருகிறது.

துணிந்து நோக்குதல் மற்றொரு பெரிய நிபந்தனை ஆகின்றது. வேறு எதிலும் நாட்டமில்லாது மெய்ஞானத்தி

லேயே நாட்டம் கொண்டிருப்பவருடைய துணிவே உண்மையான துணிவு ஆகின்றது. பயன்படாதவைகளைத் துணிந்து நாடின் அந்தத் துணிவில் சிறப்பு இல்லை. பயன்படும் பொருளையே துணிந்து நாடின் அந்தத் துணிவு சிறப்புடையதாய்விடுகிறது. அது வீரனுக்குரிய பெருஞ்செயல் ஆய்விடுகின்றது. அத்தகைய பாராட்டுதற்குரிய நல்ல துணிவும் மெய்ஞ்ஞானக் காட்சியும் இப்பொழுது ஒரு நொடிப் பொழுதில் வாலிக்கு வந்துவிட்டது. ஞானி ஒருவன் பெறவேண்டிய நடுநிலை அவனுக்குச் சொந்தமாய்விட்டது. அதன் விளைவாகத் தனக்கு நிகழ்ந்த நிகழ்ச்சியையும் உலகிலே உயிர்கள் அனைத்துக்கும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளையும் அவன் எங்ஙனம் பொருள்படுத்துகின்றான் என்று பார்ப்போம்.

உடல் எடுப்பதற்குத் தோன்றுதல் என்று பெயர். உடலை உகுத்துவிடும் செயலுக்கு இறத்தல் என்று பெயர். இத் தகைய பிறப்பும் இறப்பும் உயிர்கள் அனைத்துக்கும் உண்டு. உயிர்கள் எங்கே இருக்கின்றன என்னும் கேள்வி எழலாம். இம் மண்ணுலகில் மட்டும் உயிர்கள் இருக் கின்றன என்று எண்ணலாகாது. பூலோ கம், புவர்லோகம், சுவர்லோகம் என்று இயம்பப்பெறும் மூன்று உலகங்களிலும் உயிர்கள் இருக்கின்றன. அவையாவும் தோன்றவும் மறையவும் செய்கின்றன. இத்தகைய ஜனன மரணத்துக்கு ஓய்வு இல்லை. வினைப்பயனாக எல்லா உயிர்களும் உடல் எடுப்பதையும், உடலைத்துடைப்ப தையும் ஓயாது செய்துகொண்டே வரு கின்றன. உடல் எடுத்துள்ள ஜீவன் ஒருவன் அந்த உடலை உகுத்தே ஆகவேண் டும். ஆனால் உடல் எடுத்திருக்கும் வேளை

யில் உடலை உகுப்பதைப்பற்றி அவன் எண்ணுவது கிடையாது. சாசுவதமாகத் தனக்கு உடல்வாழ்வு நிலைத்திருக்கு மென்றே ஒவ்வொரு ஜீவனும் எண்ணி வரு கிறான். உடல் ஒடுங்குகின்ற வேளையிலும் அது ஒடுங்காது; ஏதேனும் ஒருவிதத்தில் தப்பித்துக்கொள்ளும் என்கின்ற நம் பிக்கை வைத்திருக்கிறான். ஆனால் தெளிந்த அறிவு அடையப்பெற்றவ னுக்கே இதன் உட்கருத்து உள்ளபடி விளங்குகிறது. பிழைத்திருத்தல் சாதல் ஆகிய இரண்டையும் சமனாகக் கருதும் பாங்கு அப்பொழுது வந்துவிடுகிறது. இயற்கையின் நடைமுறையை உள்ளபடி அறிகின்றவர்கள் சூரியோதயத்தைக் குறித்து மகிழ்வுறுகிறதில்லை; சூரிய அஸ்த மனத்தைக் குறித்துத் துன்புறுவதுமில்லை. இரண்டு நிகழ்ச்சிகளையும் அறிஞர் சமனா கக் கருதுகின்றனர். வாழ்வின் மர்மத்தை

அறிந்தவர்கள் ஜனன மரணத்தைச் சமனு கக் கருதுகின்றனர். எல்லா உயிர்களுக் கும் பிறப்பும் இறப்பும் வந்தே ஆகவேண் டும் என்பதையும் அறிந்துகொள்கின் றனர். அத்தகைய ஞானேதயம் வாலிக்கு இப்பொழுது வந்துவிட்டது. ஆகவே அவன் பகர்கின்முன் : தோன்றலும் இறத் தல்தானும் துகளறத் துணிந்து நோக்கின் மூன்று உலகத்திஞேர்க்கும் மூலத்தே முடிந்தவன்றே!

அக்ஞானத்தில் இறப்பவர்களுக்குப் பிறப்பு உண்டு. நிறைஞானம் அடையப் பெற்றவர்களுக்கு வருகிற மரணம் மறு படியும் ஜனனத்தை உண்டு பண்ணுவ தல்ல. ஆதலால் ஜீவன்முக்தன் ஒருவனே மாய்ந்துபோனுன் என்று சொல்லுவ தில்லே. அவன் தேகத்தை ஒருங்கே களைந்து எறிந்தவன். வறுத்தெடுத்த நெல்

பூமியில் நட்டால் திரும்பவும் முளைக்காது. ஞானக்கினியில் வறுத்தெடுக்கப்பட்ட ஜீவன் திரும்பவும் பிறப்பெடுப்பதில்லை. அப்படி ஞானக்கினியில் வறுத்தெடுக்கப் படும் செயல் தவம் என்று அழைக்கப்படுகிறது. தகித்தல் என்பது அதன் பொருள். ஜீவனுக்கு மேலும் பிறப்பெடுப்பதற்கு ஏதுவாய் உள்ள ஆகாமியகர்மம், சஞ்சித கர்மம் ஆகியயாவும் அந்த ஞானக்கினியில் வெந்து போய்விடுகின்றன. அதைத்தான் தவத்தின் விளைவு என்கிறோம். அப்படி ஞானம் அடையப்பெற்ற ஜீவன் உடலை உகுக்கும் பொழுது தன் யதார்த்த சொரூபத்தை உள்ளபடி உணருகிறான். தான் அடைந்துள்ள முக்திநிலையும் அப்பொழுது அவனுக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளங்கிவிடுகிறது. இக்கோட்பாட்டை வாலியின் வாயினின்றே கேட்போம்; யான் தவம் உடைமையால் இவ்

இறுதி வந்து இசைந்தது. இது அவன் வாக்கு.

முக்தி அடையும் ஜீவன் தன் யதார்த்த சொரூபத்தையும் அறிகின்றான்; தன் தலைவனுடைய சொரூபத்தையும் அறிகின்றான். தனக்கும் தன் தலைவனுக்கும் உள்ள தொடர்வையும் அப்பொழுது அவன் அறிந்துகொள்கின்றான். அனந்தங்கோடி ஜீவர்களுக்கும் தலைவன் ஒருவனே. அவன் எங்கு இருக்கின்றான், எப்படி இருக்கின்றான் என்பது கேள்வி. மனத்தகத்து சாட்சியாக எல்லார் உள்ளத்திலும் அவன் வீற்றிருக்கின்றான். அவனைத்தான் மனச் சாட்சி என்று நாம் சொல்லுகிறோம். மனது என்னும் திரை தெளிவு அடையு மளவு அந்த சாட்சியின் சொரூபம் ஜோதி சொரூபமாக ஒளிர்கிறது. ஜீவன் எடுத் துள்ள கணக்கற்ற பிறவிகளில் அவன்

மனச் சாட்சியாக வீற்றிருந்திருக்கிறான். படிப்படியாக ஜீவனைப் பக்குவப்படுத்து கின்ற செயலையும் அவன் செய்துவந்துள் ளான். அந்தப் பரம்பொருளே இப் பொழுது ஒரு மானுடவடிவெடுத்து வாலி யின் எதிரே நிற்கின்றது. வாலி அதை ஞானக்கண்ணால் அறிகின்றான். ராம மூர்த்தி என்ற பெயரை அப்பொருள் ஈண்டு பெற்றுள்ளது. அவனுடைய செய லெல்லாம் உயிர்களைப் பக்குவப்படுத்து கின்ற செயலாம். ஆதலால் அவனை வீரன் என்று அழையாது வேறு எப்பெயரிட்டு அழைப்பது?

அந்த வீரனுடைய செயல் எங்கு எப் படி முற்றுப்பெறுகிறது என்பது கேள்வி. வீடு பெற நில் என்பது பழமொழி. மோக்ஷம் அடைய முயல் என்பது அதன் பொருள். மோக்ஷ சாம்ராஜ்யத்தின்

வாயிலைத் திறந்துவைத்து அதனுள் வாவென்று வாலியை இவ்வீரன் அழைக்கின்றான். அதற்கேற்ற செயல் ஒன்றையும் இப்பொழுது அவன் செய்துமுடித்துவிட்டான். அக்ஞானநிலையிலுள்ள உயிர்களின் காட்சியில் அது அடாதசெயல். முன் எச்சரிக்கை இன்றிக் கோழைபோன்று மறைந்திருந்து அம்புஎய்தது அவனுடைய தீயசெயல் என்று உலகத்தவர் கருதுகின்றனர். ஆனால் பெறுதற்கரிய வீட்டை அவன் வழங்கியுள்ளான் என்று வாலி பகர்கின்றான். குற்றம் சாட்டவேண்டிய நிலையில் இருப்பவன் பெறுதற்கரிய பேற்றை அந்தவீரன் வழங்கினான் என்று போற்றுகின்றான். இனி மற்றவர்கள் வீணே ராமன்மீது குற்றம் சாட்டுதற்கு இடம் எங்கே? ஸ்ரீராமன் எத்தகையவன், எச்செயலைச்செய்து முடித்தான் என்பதை வாலியின் வாயினின்று கேட்போம்:

யார்க்கும் சான்று என நின்ற வீரன் தான் வந்து வீடு தந்தான் — எல்லாருடைய மனத்தகத்திலும் மனச்சாட்சியாக எழுந்தருளியிருக்கின்றபரம்பொருள் ரகுவீரனுக என்முன் வந்து எனக்கு மோக்ஷசாம்ராஜ்யத்தைத் தந்தருளியுள்ளான்.

ராமாயணம் என்னும் இதிகாசத்தில் ராவணன் ஒரு முக்கியமான இடம் பெறுகின்ருன். ஒருவிதத்தில் ராவணன் இல்லாது ராமாயணமே இல்லாது போய்விடும் என்று இயம்பலாம். பல காரணங்களை முன்னிட்டு ராவணன் போற்றுதற்குரிய பாத்திரமே. ராமாயணத்தின் உட்கருத்தை அறிந்து கொள்ளாத ஒரு கூட்டத்தார் இந்த இதிகாசத்தை இராமாயணம் என்று பகர்தற்குப் பதிலாக இராவணுயனம் என்று பகர முனைகின்ருர்கள். வெறும் வெறுப்பை அடிப்படையாகக்

கொண்டு அவர்கள் இங்ஙனம் முயலுகின் றனர். நடுநிலையினின்று ஆராய்கின்றவர் களுக்கு இம் முயற்சியில் பொருள் சிறிது அடங்கியிருப்பது புலப்படும். இயற்கை யில் ஒவ்வொரு வஸ்துவுக்கும் எதிர்மறை யானது ஒன்று உண்டு. ஒவ்வொரு நிகழ்ச் சிக்கும் எதிர்மறையானது ஒன்று உண்டு. அமிர்தத்துக்கு எதிர்மறையானது விஷம். பகலுக்கு எதிர்மறையானது இரவு. ஒன்றை விளக்குதற்கு மற்றது பயன்படு கிறது. இது இரவு அல்ல என்று சொல்லு வதன் மூலம் பகல் ஓரளவு விளக்கப்படு கிறது. இது அமிர்தம் அல்ல என்று இயம்பும் பொழுது அது நஞ்சுக்கு விளக்க மாய் விடுகின்றது. ராவணன் அத்தகைய எதிர்மறை நிலையில் இருக்கின்றான். அவ னைப் பிடித்திருந்த காமநோய் அவனு டைய வீரச்செயல்களையெல்லாம் கொடுஞ் செயல்கள் ஆக்கிவிடுகின்றன. அவன் ஒரு

பெரிய சிவபக்தன். நெடுங்காலம் காமிய தவம் புரிந்தவன். வேதத்தை நன்ருக ஆராய்ச்சி பண்ணியவன். ராமாயணத்தில் அமைந்துள்ள பாத்திரங்களில் வேதத்தில் கரைகண்டவன் இவன் ஒருவனே. அரிய வரங்கள் பலவற்றை வாங்கியவன் இவன். தேவர்களையும், தானவர்களையும், அசுரர்களையும், நரர்களையும், ஏனைய உயிர் வகைகளையும் இவன் நன்ருக அறிந்தவன். அவர்களின் ஆற்றல்களைப்பற்றியும் ராவணனுக்கு நன்ருகத் தெரிந்திருந்தது யாது காரணத்தாலோ ராமனிடத்து அவனுக்குப் பெரும் வெறுப்பு. அவனை அலக்ஷியப்படுத்துவது ராவணனுடைய இயல்பு. நாடாள அவன் தகுதியற்றவன் என்கின்ற முடிவுக்கும் வந்திருந்தான். சீதை போன்ற பெண்ணரசி ஒருத்தியை உடைத்திருப்பதற்கு ராமன் தகுதியற்றவன் என்பது ராவணனுடைய கருத்து.

உயிரைப் பட்டினி போட்டுக் கொல்லு வது போன்று இராமனைச் சீதையினிடத் திருந்து பிரித்து வைத்துக் கொன்றுவிட லாம். அப்படிச் செய்துவிட்டால் சீதை நிரந்தரமாகத் தனக்கு உரியவள் ஆய்விடு வாள். இங்ஙனம் மனக்கோட்டை கட்டி ஞன். ஆகவே சீதையையும் அபகரித் துக்கொண்டு போய்விட்டான்.

இலங்கைக்குள் படையுடன் வந்து சேர ராமனுக்குஇயலும் என்று ராவணன் எதிர்பார்க்கவில்லை. ஆனுல் இராமன் இலங்கைக்குள் நுழைந்துவிட்டான். போர் மூண்டுவிட்டது. ராவணனுடைய தலைவர் களில் பலபேர் மாண்டுபோய்விட்டார்கள். இப்பொழுது நேர் ராவணனுக்கும் ராம னுக்கும் போர் துவங்கிவிட்டது. இது ஒரு முக்கியமான சம்பவம். ராமனையும் ராம னுடைய செயலையும் பார்த்த ராவணன் இங்ஙனம் பகர்வானுயினன் :

சிவனோ வல்லனுன்முக னல்லன் றிருமாலாம்
அவனோ வல்லன் மெய்வரமெல்லா மடுகின்றுன்
தவனோ வென்னிற் செய்துமுடிக்குந் தரனல்லன்
இவனோ தானவ் வேதமுதற் காரணனென்றுன்.

ராவணனுடைய உபாசனுமூர்த்தி சிவன். அதை வேறு பாங்கில் சொல்லுமிடத்து அவன் சிவபக்தன். அவனுடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டுபோகின்ற பாங்கில் இப்பொழுது ஒரு புருஷன் தென்படுகின்றுன். எடுத்த எடுப்பில் தன்னுடைய உபாசனுமூர்த்தியோ என்கின்ற ஐயம் அவனுக்கு வந்துவிடுகிறது. தன்னையறியாது ராமனுக்கு எவ்வளவு பெரிய மதிப்புக் கொடுத்துவிட்டான் என்பது அக்கூற்றிலிருந்து வெளியாகிறது. எதிரி என்கின்ற எண்ணத்தை ராமனுடைய பொலிவு தோற்கடித்துவிட்டது. ஆதலால்தான் அவன் அங்ஙனம் பகரவேண்டியதாயிற்று. தன்னை எதிர்த்துப் போர்

புரிவதால் தன் வழிபடுதெய்வம் அல்ல என்கின்ற முடிவுக்கு வந்தான். மற்ற தெய்வங்களையும் பலதடவைகளில் அவன் சந்தித்திருக்கின்றான். அவர்களின் மகிமைகளும் ராவணனுக்கு நன்கு தெரியும். இப்பொழுது கண்ணெதிரே தென்படுகின்ற சொரூபம் நான்முகனும் அல்லன், திருமாலும் அல்லன் என்கின்ற முடிவுக்கு வந்துவிடுகின்றான். இங்ஙனம் மும்மூர்த்திகளோடு சீர்தூக்குகின்ற இடத்துத் தன் எதிரி என்பதை மறந்துவிட்டுத் தென்படும் மூர்த்தியை உள்ளது உள்ளபடி மதிப்புப் போடுகிறான்.

ராவணன் பெற்றிருந்த வரங்களுக்கு எல்லையில்லை. மூவுலகுக்கும் அரசன் என்கின்ற பெயர் அதை முன்னிட்டே அவனுக்கு வந்தது. தான் பெற்றிருந்த வரங்களைக் கொண்டு தேவ, தானவர்களையெல்

லாம் தோற்கடித்துவந்தான். ஆனால் இங்கு அவனுக்கு ஏற்படும் அனுபவம் யாது? மெய்வரம் எல்லாம் அடுகின்றான் என்று தன் தோல்வியைத் தானே ஒத்துக் கொள்கின்றான். அவன் பெற்ற வரங்க ளெல்லாம் இப்பொழுது பஸ்பமாகின்றன. எங்கிருந்து இவனுக்கு இத்தகைய வலிவு வந்தது என்கின்ற ஆராய்ச்சியையும் அந் தக்கடும்போர்க்களத்திலேயே அவன் செய் கிறான். அத்தகைய ஆராய்ச்சி அவனு டைய மனத்திட்பத்துக்கு எடுத்துக்காட்டு ஆகும். தான் பெற்ற வரமெல்லாம் தவத் தின் விளைவு. அவன் எதிரேதென்படுகின்ற ராமமூர்த்தியோ தவம் ஒன்றும் செய்தவ னாகத் தென்படவில்லை. வயதில் இளைய வனாக அவன் காட்சி கொடுக்கின்றான். ஆக, தவத்திற்கேற்ற வயது இல்லை. அதற்குமேல் அவன் தவமிழைத்துப் பெற வேண்டியது ஒன்றுமில்லை என்கின்ற தெய்

விகப் பண்பும் அவனிடத்துப் பொலிந்து கொண்டிருக்கிறது. இதை ராவணன் நன்கு அறிந்துகொள்கிருன். அவன் வெளியிடுகின்ற கருத்தை நாம் எண்ணிப் பார்ப்போம். தவனே என்னில் செய்து முடிக்கும் தரன் அல்லன் என்பதே அவனுடைய முடிவு ஆகும். முழுமுதற் பொருளாகிய பரப்பிரம்மம் தவம் செய்ய வேண்டிய அவசியமில்லே. தன்னே அறியாது இப் பேருண்மையை தசமுக ராவணன் வெளியிடுகின்ருன்.

தான் கற்றிருந்த வேதத்தை இப் பொழுது அவன் சிந்தனேக்குக்கொண்டு வந்து பார்க்கிருன். வேதத்தின் பிறப்பிடத்தைக் கண்டறிந்தவர் வேதவித்துக்கள் யாருமில்லே. தந்தையின் பிறப்பை எங்ஙனம் மைந்தன் பார்த்ததில்லேயோ அங்ஙனம் வேதநாயகனுடைய சொரூ

பத்தை வேதம் கற்றவர்கள் அறிந்தது கிடையாது. வேதம் கற்றவர்களுள் தலைவனாகிய தசமுகன் இவனேதான் அவ் வேத முதல்காரணன் என்று வியக்கின்றான். இங்ஙனம் ராவணன் வாயினின்றும் ராம சொரூபம் நமக்குப் பொருத்தமாக விளக்கப்படுகிறது. ராம சொரூபத்தின் விளக்கம் யார் வாயின்மூலம் வெளியானாலும் அது வேதாந்தமாகவே வடிவெடுத்துவிடுகிறது. ஆக, வேதாந்தத்தை வெளியிட்டு ரிஷியினுடைய நிலைக்குத் தன்னை உயர்த்திக்கொள்கிறான் கம்பனும். ராம சொரூபத்தை விளக்க முயன்றதினால் அத்தகைய பரஞானம் அவனுக்குத் தானாக வந்துவிடுகிறது.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய மற்ற நூல்களுக்கு

மானேஜர், தபோவனப் பிரசுராலயம்
திருப்பராய்த்துறை போஸ்ட், திருச்சி ஜில்லா
என்ற விலாசத்திற்கு எழுதி விவரம்
தெரிந்துகொள்ளுங்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தினின்று
ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களை
ஆசிரியராகக்கொண்டு வெளிவரும்

தர்ம சக்கரம்

என்னும் தமிழ் மாதாந்திரப் பத்திரிகைக்கு
மானேஜர், தர்ம சக்கரம்,
திருப்பராய்த்துறை போஸ்ட், திருச்சி ஜில்லா
என்ற விலாசத்திற்கு எழுதி விவரம்
தெரிந்துகொள்ளுங்கள்.

தபோவனத் தொடர் 28

ஸ்ரீ ராமகிருஷ்ண
தபோவனப் பிரசுராலயம்
திருப்பராய்த்துறை போஸ்ட்,
எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா

விலை அணா ஐந்து பிரசார விலை 0-2-6